# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்

# இயேசு ஒரு பெரிய போதகர்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Byron Unger; Lazarus
Alastair Paterson

தழுவியவர்: E. Frischbutter; Sarah S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2022 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி
உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.



இயேசு ஒரு
பெரிய போதகர் -
எப்பொதும் சிறந்தவர், திரளான
கூட்டங்கள் அவரை கேட்டார்கள்.
இயேசு அவர்களுக்கு சொன்னது
இரக்கமுள்ளவர்களாயிருங்கள்,
நல்லவர்களாய், மற்றும்
தயவுவுள்ளவர்களாயிருங்கள்.



மற்றவர்கள் வெறுத்து,
புண்படுத்தலாம், ஆனால்
தேவனோ அவர்கள் மேல்
அக்கரையுள்ளவராயிருக்கிறார்.



இயேசு அநேக காரியங்களைக் கற்பித்தார், ஒரு மெழுகுவர்த்தி எப்படி ஒரு வீட்டிற்கு வெளிச்சம் கொடுக்கிறதோ, அதேபோல் தேவனுடைய பிள்ளைகளும் வெளிச்சம் கொடுக்கிறார்கள். ஒரு இருண்ட அறையிலே ஒரு மெழுகுவர்த்தி எவ்வளவு வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது!

இயேசு சந்தித்த மக்கள், "கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல்," என்கிற பழிவாங்கும் சிந்தனையில் காணப்பட்டார்கள். ஆனால் இயேசுவோ, சத்துருக்களுக்கும் தயவையும், மன்னிப்பையும், அன்பையும் காட்டும்படி போதித்தார்.





இயேசுவின் நாட்களில்,
சிலர் பரிசுத்தமாயிருப்பதுபோல்
நடித்தார்கள். ஒரு
பிச்சைக்காரனுக்கு அவர்கள்
தானதருமம் செய்யும்போது,
எல்லோரும் பார்க்கும்படி, ஒரு
மனிதனை எக்காளம் ஊதச்
செய்வார்கள்.

"இரகசியமாக
கொடுங்கள். தேவன்
உங்களுக்கு
பதிலளிப்பார்," என்று
இயேசு சொன்னார்.



ஜெபத்தைக் குறித்தும் இயேசு இப்படிபோதித்தார். சிலர் தாங்கள் ஜெபிப்பதை எல்லோரும் பார்க்கும்படியும், எல்லோரும் கேட்கும்படியும் சுறுசுறுப்பான வீதிகளின் முனையிலே நின்று ஜெபிப்பார்கள்.



அவர்கள் தேவனைப் பற்றி கவலைப்படவில்லை மற்றவர்கள் தங்களைக் குறித்து என்ன நினைப்பார்கள் என்று அக்கரைப்பட்டார்கள். இயேசு அவர்களை மாயமாலக்காரர்க்ள் - தப்பாக நடிப்பவர்கள் - என்று அழைத்தார்.



இயேசு போதிக்கும் போது இயற்கை காட்சிகளைக் காட்டி விளக்குவார். உதாரணமாக, ஆகாயத்துப் பறவைகளை காட்டினார். "உங்கள் பரமபிதா அவைகளைப் போஷிக்கிறார்," என்றார். "கவலைப்படாதிருங்கள். தேவன் உங்களையும் போஷிப்பார்."



"பெரிய பணக்காரனாகிய சாலமோன் ராஜா கூட
இந்த காட்டுப் புஷ்பங்களைப் போல் நன்றாக
உடுத்தியதில்லை," இயேசு தொடர்ந்தார்.



"தேவன் காட்டு புல்லுக்கு உடுத்துவித்தால், உங்களையும் உடுத்துவிக்க மாட்டாரோ?" நம்முடைய தேவைகளை சந்திக்கிற தேவனை நம்புங்கள் என்று இயேசு போதித்தார்.



"நீங்கள் உங்கள் சகோதரனை நியாயந்தீர்ப்பது,
உங்களுடைய கண்ணில் உத்திரம் இருக்க,
உங்களுடைய சகோதரன்
கண்ணில் இருக்கிற
துரும்பை எடுக்க
முயற்சிப்பதாகும்,"
என்று இயேசு
சொன்னார்.
ஒருவேளை
ஜனங்கள்
பயப்பட்டிருக்கலாம்.
ஆனால் அதினுடைய
அர்த்தங்களைக்
குறித்து
யோசிக்கவேண்டியதாயிற்று.





தேவனிடத்தில் உதவி
கேளுங்கள் என்று இயேசு
சொன்னார். இந்த உலகத்தில்
தகப்பன்மார்கள் தங்களுடைய
பிள்ளைகள் அப்பத்தைக்
கேட்டால் பெரிய கல்லை
கொடுப்பார்களா?
இல்லையே!
அவர்கள் நல்ல
காரியங்களையே
கொடுப்பார்கள்.

தம்மிடத்தில்
வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு
தேவன் நல்லதையே
கொடுப்பார்.

தவறான போதனை செய்பவர்களைக் குறித்து இயேசு எச்சரித்தார். "அவர்கள் ஆடுகளைப் போல் உடை உடுத்துகிறார்கள். ஆனால் உள்ளேயோ அவர்கள் ஓநாய்கள்," என்றார் இயேசு. ஒருவர் தவறான போதகரா என்பதை அவர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.



இயேசு சொன்ன உவமை என்னவெனில், தேவனுடைய வார்த்தையைக் கேட்டு கீழ்படிகிறவர்கள் கற்பாறையின் மேல் வீடு கட்டியவர்களுக்கு ஒப்பாவார்கள். பெரிய வெள்ளம் வந்தது. ஆனால் முடிவிலோ, அந்த வீடு நிலையாக நின்றது.



புத்தியில்லாத மனுஷனோ மணலின் மேல் தன் வீட்டைக் கட்டினான். பெருவெள்ளம் வந்து காற்று வீசியபோது, அது தரைமட்டமானது ஏனெனில் அது பலவீனமான அஸ்திபாரத்தில் கட்டப்பட்டிருந்து. தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாதவர்களும் இந்த புத்தியில்லாத மனுஷனுக்கு சமமாயிருக்கிறார்கள்.



ஜனக்கூட்டம் இயேசுவின் போதனையைக் கேட்டு ஆச்சரியப்பட்டது.  இதைப் போல் அவர்கள் இதுவரை கேட்டதேயில்லை. தேவனுடைய வார்த்தையை கேட்பது மட்டும் போதாது என்று இப்போது ஜனங்கள் உணர்ந்தார்கள். ஒவ்வொரு நாளும் அதற்கு கீழ்ப்படிய வேண்டும்.



# இயேசு ஒரு பெரிய போதகர்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

மத்தேயு 5 - 7, லூக்கா 6

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16